# உலகப் பொதுமறை வள்ளுவம்



தொகுப்பாசிரியர் : உடையார்கோயில் குணா

பதிப்பாசிரியர்கள்

முனைவர் அ.ஜெஸின் பிரான்சிஸ்

முனைவர் க.சுஜாதா

முனைவர் க.இந்துமதி

முனைவர் சி.சங்கீதா

செ.தமிழரசி

## உலகத் திருக்குறள் மாநாடு-2019 மலேசியா

தமிழ்த் தாய் அறக்கட்டளை வெளியீடு 10

உலகப் பொதுமறை

# வள்ளுவம்

## தொகுதி-1




தொகுப்பாசிரியர்

**உடையார்கோவில் குணா**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் **அ.ஜெஸின் பிரான்சிஸ்**

முனைவர் **க.சுஜாதா**

முனைவர் **க.இந்துமதி**

முனைவர் **சி.சங்கீதா**

**செ.தமிழரசி**

**உலகத் திருக்குறள் மாநாடு - 2019**

**கோலாலம்பூர் - மலேசியா.**

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-10

# நூல் விவரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | உலகப் பொதுமறை வள்ளுவம் (தொகுதி–1)<br>(உலகத் திருக்குறள் மாநாட்டு கருத்தரங்கம்) |
| தொகுப்பாசிரியர் | : | **உடையார்கோவில் குணா.** |
| துணை பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் **அ.ஜெஸின் பிரான்சிஸ்**<br>முனைவர் **க.சுஜாதா**<br>முனைவர் **க.இந்துமதி**<br>முனைவர் **சி.சங்கீதா**<br>**செ.தமிழரசி** |
| மொழி | : | தமிழ், ஆங்கிலம் |
| உரிமை–வெளியீடு | : | தமிழ்த்தாய் அறக்கட்டளை<br>மாரியம்மன் கோவில்,<br>தஞ்சாவூர்–613 501.<br>தொலைபேசி: 04362268167<br>கைபேசி: 9443938797, 7530002454. |
| அளவு | : | டெம்மி |
| பக்கங்கள் | : | 318 |
| விலை | : | ரூ.250/– |
| ISBN | : | 978-81-909877-5-2 |
| நூல் வடிவமைப்பு | : | பரிதி பதிப்பகம்,<br>சோலையார்பேட்டை.<br>வேலூர் மாவட்டம்.<br>கைபேசி: 8098908840, 7200693200 |

# திருக்குறள் புலப்படுத்தும் பால்நிலை மற்றும் பாலியல்வாழ்வு: சமூக மானிடவியல் நோக்கு

**கலாநிதி சண்முகராஜா சிறிகாந்தன்**
இலங்கை

40

பால், பால்நிலை, பாலியல் என்பன மனிதனுடைய சமூக வாழ்வியலில் முதன்மையானவைகளாகும். பால் என்பது மனித உயிரியல் உடற்கூற்றிலினடியானது. ஆனால் பால்நிலை என்பது சமூக, பண்பாட்டின் வழியாக கட்டமைக்கப்பட்டனவாகும். பாலியல் என்பது உடற்கூற்றியல் உணர்ச்சிகளின் வழிபட்ட புணர்ச்சியாகும். இயற்கையாகவே எதிர்பாலிடைக் கவர்ச்சியின் வழியாக அமையப்பெற்ற ஒரு நடத்தைமுறையாகவே பாலியல் வாழ்வு காணப்படுகின்றது. உலகில் உள்ள உயிரினங்களிடையிலான பொதுவான நடத்தைமுறையாகவே பாலியல் வாழ்வு காணப்படுகின்றது. ஆண்-பெண் பாலின உயிரினங்கள் தம்மிடையே உடலில் ரீதியாக இணைவதினை பாலியல் வாழ்வு குறித்துநிற்கின்றது. ஆனால் மனிதப் பண்பாட்டின் படிமலர்ச்சியில் இயற்கையின் நிகழ்வான புணர்ச்சினை நெறிப்படுத்தும் பண்பாட்டியல் ஏற்பாடுகள் உலகளாவிய நிலையில் வளர்ச்சிபெற்றன. மானிடவியல் அறிஞர் மார்கன் (1871) மனித குடும்ப அமைப்பின் தோற்றத்தின் முதற்கட்டமாகவே பாலியல் வாழ்வின் நெறிப்படுத்தலினைக் குறிப்பிடுகின்றார்.

சங்கமருவிய காலத்தில் எழுச்சிபெற்ற திருக்குறள், 133 அதிகாரங்களின் வழியாக மனித வாழ்வியலுக்குரிய நெறியில் கூறுகளை கூறுகின்றது. குறிப்பாக திருக்குறளின் முதல் 38 அதிகாரங்களும் மனித வாழ்வியலுக்கான நல்வழிகளையும், அதற்கடுத்த 70 அதிகாரங்கள் சமூக, பொருளாதார அரசியல் வாழ்வியல் கூறுகளையும் இறுதியான 25 அதிகாரங்களும் மனிதனுடைய காதல்சார்ந்த பாலியல்வாழ்வின் சிறப்பியல்புகளையும் பாடுபொருளாக கொண்டு காணப்படுகின்றது. இவை முறையே அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் முப்பெரும்

பிரிவுகளாக காணப்படுகின்றது. இவற்றுள் காமத்துப்பாலில் முதல் 7 அதிகாரங்களும் திருமணத்திற்கு முன்னைய பாலியல் வாழ்வு பற்றியும் (களவியல்) அதற்குப் பின்னைய 18 அதிகாரங்களும் திருமணத்திற்குப் பின்னரான பாலியல்வாழ்வு (கற்பியல்) தொடர்பாகவும் விவரித்துச் செல்கின்றது.

பால்நிலையும் பாலியலும் மனிதவாழ்வில் முதன்மையான விடயங்கள். பால்நிலை என்பது மனிதர்களிடையே நிலவும் உயிரியற் உடற்கூற்றியலில் நிகழும் வேறுபாடுகளின் அடிப்படையில் குறித்த சமூகங்களின் வழியாக கட்டமைக்கப்படும் ஒன்றாகவே காணப்படுகின்றது. அதாவது ஆண்-பெண் எனும் உயிரியல் வகைப்பாடு ஆண்மை (ஆண் இயல்பு) பெண்மை (பெண் இயல்பு) எனும் கருத்தியல், எதிர்பார்க்கப்பட்ட நடத்தைகள் ஆகியவற்றின் வழியாக ஒன்றிணைந்த சமூக கட்டமைப்பாகவே பால்நிலை காணப்படுகின்றது. திருக்குறளில் ஆண்மைபெண்மை பற்றிய பால்நிலை கட்டமைப்புக்கள் தெளிவாகவே காணப்படுகின்றது. அதாவது ஆண்களுக்குரிய எதிர்பார்க்கப்பட்ட நடத்தைமுறைகளை இல்வாழ்க்கை (அதி. 5) எனும் அதிகாரத்தில் தனியாக விவரிக்கும் அதேவேளை பெண்மைக்குரிய எதிர்பார்க்கப்படும் விழுமியங்களை வாழ்க்கைத் துணைநலம் (அதி. 6) எனும் அதிகாரத்தின் வழியாகவும் விவரித்துச் செல்லுகின்றது. எடுத்துக்காட்டாக

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை (குறள் 41)**

எனும் குறட்பாவில் குடும்பத்தின் தலைமகனாக ஆண் (இல்வாழ்வான்), அவனே ஏனைய ஆண்மக்களான பிரம்மச்சாரி (குருவிடம் கல்வி பயில்பவர்கள்), வனப்பிரஸ்தர் (மனைவியுடன் வனத்தில் சஞ்சாரம் செய்பவன்), சன்னியாசி (முற்றும் துறந்தவன்) ஆகிய மூன்று பேருக்கும் துணை நின்று கடமைபுரிபவனாக சித்தரித்திருப்பது ஆண்மைக்குரிய பால்நிலைக் கட்டமைப்பினைத் தெளிவாகவே காட்டுகின்றது. இவ்வாறே

**மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (குறள் 51)**

எனும் குறட்பாவில் ''மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான் வளத்தக்காள்'' எனும் அடியிற்கு ''மனையறதிற்குத்

தக்க நற்குண நற்செய்கைகளை உடையவளாய்த் தன்னைக்கொண்டவனது வருவாய்க்குத் தக்க வாழ்க்கையை உடையாள்'' என பரிமேலழகர் உரைசெய்திருப்பது பெண்மைக்குரிய பண்பினைத் தனித்துக் குறிப்பிடுவதைக் காணலாம். இவ்வாறே திருக்குறளில் எண்ணற்ற எடுத்துக்காட்டுக்களைக் காட்டலாம். அதாவது பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நிலவிய அதேநேரம் எதிர்பார்க்கப்பட்ட பால்நிலை நடிபங்குகளை ஆங்காங்கே குறிப்பிட்டிருப்பது இங்கு நம் கவனத்திற் கொள்ளத்தக்கது.

பால்நிலை, பால்நிலை நடிபங்கு பற்றிய மானிடவியல் ஆய்வுகளில் ருத் பெனடிற் (1934), மார்கிரேட் (1935) போன்ற புகழ்பெற்ற மானிடவியல் அறிஞர்கள் தங்களை ஈடுபடுத்தி பல்வேறு முடிவுகளை எமக்குத் தந்துள்ளனர். அவற்றுள் குறிப்பாக அமைவது பால்நிலை மற்றும் பால்நிலை நடிபங்குகளில் குறித்த பண்பாடுகளின் செல்வாக்குகளை தங்களுடைய களஅனுபவங்களுடாகவே கண்டறிந்துள்ளனர். பால்நிலை கட்டமைப்பு என்பது மனிதர்களிடையே தனித்துவமான அடையாள உருவாக்கத்திற்கு மட்டுமன்றி வாழ்நிலை நடத்தைக் கோலங்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. இன்று உலகளாவியநிலையில் பால்நிலை ரீதியான வகைப்பாடு என்பது தனியனுடைய நடிபங்கு ஏற்றலுடன் தொடர்புடையதாக காணப்படுகின்றது. குடும்பத்தின் சீரான வாழ்வியலில் பால்நிலை நடிபங்குகளின் இடம் தனித்துவமானது. இதனையே வள்ளுவர் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன் பதிவுசெய்துள்ளார். அதாவது தந்தை (67), தாய் (69), மனைவி (58), மகளிர் (57) ஆகியோருக்குரிய பால்நிலை நடிபங்குகளை மேற்குறிப்பிட்ட குறட்பாக்களில் தெளிவாகவே காணலாம்.

மனிதர்களுடைய பால்நிலை கட்டமைப்பு போன்றே பாலியல் வாழ்வு முதன்மையான விடயமாகும். தொல்காப்பியர் தொடக்கம் இன்றை நவீன கவிஞர்கள் வரையாக மனித பாலியல் வாழ்வினை இலக்கியங்களாகப் படைத்துள்ளனர். சங்க இலக்கியல்கள் பலவும், போற்றிதிரு அகவலில் மாணிக்கவாசகரும், பட்டினத்தார் தன் பாடல்களிலும் மனிதனுடைய பாலியல் வாழ்வினை நயம்பட உரைத்துள்ளனர். இந்நிலையில் திருவள்ளுவரும் திருக்குறளில் மனிதர்களுடைய பாலியல் வாழ்வின் சிறப்புக்களையும் நெறிமுறைகளையும் குறிப்பிட்டுள்ளார்.

உலக சுகாதார அமையத்தின் பால்நிலை மற்றும் மனித உரிமை என்ற அறிக்கையில் "பாலியல்" தொடர்பான செயற்பாட்டு வரையறையில் பாலியல் என்பது மனித வாழ்நாள் முழுவதும் நிலவுகின்ற மைய அம்சமாகும். பாலுறவு, பாலினம் அடையாளங்கள் மற்றும் பாத்திரங்கள், பாலியல் ரீதியான பாலுணர்வு, இன்பம், நெருக்கம் மற்றும் இனப்பெருக்கம் போன்றனவும் பாலியல் எனும் எண்ணக்கருவினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. பாலியல் என்பது உணர்வுகள், கற்பனை, ஆசைகள், நம்பிக்கைகள், மனப்பான்மைகள், மதிப்புகள், நடத்தை, நடைமுறைகள், பாத்திரங்கள் மற்றும் உறவுகளில் ஆகியவற்றின் அனுபவமாகவும் வெளிப்பாடுகளாகவும் அமைகின்றது *(2004)*. இந்நிலையில் திருக்குறளில் காணப்படும் மனித பாலியல் வாழ்வு சார்ந்த கருத்துநிலைகளைப் பின்வரும் அடிப்படையில் ஆராயலாம்.

## காதல்– காமம்

காதலும் காமமும் இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவாக இருந்தாலும் காமத்தை விட காதல் திருக்குறளில் வெகுவாகப் போற்றப்பட்டுள்ளது. மனிதனின் பாலியல் வாழ்விற்கு காமம் அடிப்படையானது, ஆனால் அது காதலின் வழிப்படும் போது சிறப்படைகின்றது. காமம் என்ற அடைவுமொழி வழியாக திருக்குறள் மனிதர்களுடைய பாலியல் வாழ்வினை மிகத் தெளிவாகவே காட்டுகின்றது.

புணர்ச்சி மகிழ்தல் எனும் அதிகாரத்தின் முதற் குறள் "கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும், ஒண்டோடி கண்ணே உள *(1101)* எனும் குறளின் பொருளைச் சற்று ஆழமாக நோக்கின் மனிதனுடைய ஐம்புலங்களுடன் ஒன்றிணைந்த உணர்வுகளின் சங்கமாக பாலியல் வாழ்வினைத் தெளிவாகவே காட்டுகின்றது. உண்மையில் புணர்ச்சி என்பது பாலியல் வாழ்வின் முதன்மையான அங்கம். அப்புணர்ச்சினை வள்ளுவர் காமம் எனும் அடிப்படையில் தெளிவாகவே வெளிப்படுத்தியுள்ளார். எனினும் காமத்தின் அடிப்படையான புணர்ச்சியனை குறிப்பிடும் போது அதற்கு உவப்பான மனிதச் செயற்பாடுகளான எதிரிடைப் பால் இடைவினைகளை ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளார். எடுத்துக்காட்டாக. தலை அணங்கு உறுத்தல் *(109)*, குறிப்பு அறிதல் *(110)* போன்ற அதிகாரங்களில் இவற்றினைக் காணலாம்.

காமத்துப் பாலினின் இறுதி அதிகாரங்களான புலவி (131), புலவி நுணுக்கம் (132) ஊடல் உவகை (133) போன்ற அதிகாரங்களில் மனிதர்களுடையிலான பாலியல் வாழ்வின் சிறப்பியல்புகளைக் காணலாம். எடுத்துக்காட்டாக காதலுடன் இணைந்த காமத்தின் வழியான பாலியல் வாழ்வின் சிறப்பினை நிலத்தொடு நீர் கலந்தாற் போல ஒற்றுமை உடைய காதலர் மாட்டுப் புலத்தல் போல (1323) எனக்குறிப்பிட்டுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. காமத்துப்பாலின் எண்ணற்ற குறட்பாக்கள் மனித பாலியல் வாழ்வின் சிறப்புக்களை காமம்காதல் எனும் பொருண்மையின் அடிப்படையில் விளக்கிடக் காணலம்.

## பாலியல் ஒழுக்கங்கள்

பாலியல் வாழ்வு என்பது ஒரு புறம் மனிதர்களுக்கு இன்பம் நல்கும் ஒரு செயற்பாடக இருந்தாலும் அவற்றில் ஒழுக்கம் வேண்டும் என்பதனை திருவள்ளுவர் தெளிவாகவே குறித்துக் காட்டுகிறார். மனிதனுக்குரிய அடிப்படையான ஒழுக்கங்களை ஒழுக்கவுடமை (14) எனும் அதிகாரத்தில் குறிப்பிட்டு அதற்கு அடுத்த அதிகாரத்தில் பாலியல் ஒழுக்கத்தின் சிறப்பினை பிறன்இல் விழையாமை (15) எனும் அதிகாரத்தில் குறிப்பிட்டு இருப்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. மனிதனுடைய அடிப்படையான ஒழுங்கங்களுள் பாலியல் வாழ்வு சார்ந்த ஒழுக்கமும் அவசியமானது என்பதனையே இது குறித்துக்காட்டுகின்றது.

ஆண்கள் தன்னுடைய இல்லாள் தவிர்த்து பிறன் மனையாளை நோக்காமையே ஆணுக்குரிய சிறந்த "பேராண்மை" (148) எனக் குறிப்பிடுகின்றது. அறனாகிய இயல்போடு கூடி இல்வாழ்வான் என்று சொல்லப்படுவான் யார் எனில் பிறனுகுரிய பெண்தன்மையை விரும்பாதவன் (147) எனக் குறிப்பிட்டிருப்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. மேலும் பெண்வழிச் சேறல் (91) அதிகாரத்தில் ஒரு ஆணுக்கு காமத்தால் வரும் பகை என்பது அவனுடைய ஆக்கத்தினைச் சிதைவடையச் செய்வதுடன் அழிவையும் தரும் என எச்சரிக்கையுடன் குறிப்பிட்டிருப்பது ஒருவன் தன்னுடைய பாலியல் வாழ்வில் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டியதன் அவசியத்தினைக் குறித்துரைப்பதாக அமைகின்றது.

## பாலியல் நெறிபிறழ்வு

சங்க காலத்தில் பரத்தையர் நாடல் என்பது குற்றமாகக் கடிந்து கூறப்படாத நிலையில் சங்க மருவிய காலத்தில் தோற்றம் பெற்ற அற நூல்கள் பல இதனை கூடா ஒழுக்கமாகவே குறித்துரைக்கப்படுகின்றன. இந்தவகையில் திருக்குறளில் மனிதர்களுடைய பாலியல் வாழ்வியலில் பாலியல் நெறிபிறழ்வு என்பது தெளிவாகவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்தவகையில் பெண்வழி சேறல் (91) எனும் அதிகாரத்தில் "பெண்சேர்ந்தாம் பேதமை" (910) என்று ஆண் பெண்வழி நிற்றலை கடிந்து கூறியுள்ள நிலையில் அதனைத் தொடர்ந்து வந்த "வரைவின் மகளிர்" (92) எனும் அதிகாரத்தில் பரத்தையர் இயல்பும் அவர்களின் சமூக நிலை பற்றியும் குறிப்பிட்டிருப்பதுடன் அவ்வாறான வரைவின் மகளிரோடு சேர்பவர்கள் அறிவில்லாத மக்கள் (919) எனக் கடிந்து கூறியிருப்பது ஈங்கு கவனிக்கதக்கது.

## கற்பு

பழந்தமிழர் வாழ்வியலில் பாலியல் வாழ்வை நெறிப்படுத்திய மிகப் பெரிய மூல விடயம் "கற்பு" என்பதாகும். கற்புடமையின் சிறப்பினை தொல்காப்பியரும், ஔவையாரும் திறம்பட உரைத்துள்ளனர். திருவள்ளுவரும்

> **"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
> **திண்மைஉண் டாகப் பெறின். (54)**

என்று ஒரு பெண்ணிடம் உள்ள மேம்பட்ட பொருளாக கற்பினை வள்ளுவர் முன்நிறுத்தியிருப்பது கவனிக்கத்தக்கது. மனிதர் குலத்தின் மாண்பினைச் சிறப்படையச் செய்வதற்கு பாலியல் வாழ்வினை ஒரு நியமமாக்குவதற்குரிய வரன்முறையாகவே "கற்பு" அமைந்திருப்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

திருக்குறள் பாலியல் வாழ்வு பற்றி பேசும் விடயங்களை மிக ஆழமாக உற்றுநோக்கும் போது "ஒருதார மணமுறையின்" அவசியத்தினையே வலியுறுத்திக் கூறுவதாக உள்ளது. உண்மையில் இன்று பல்வேறுபட்ட சமூக மாற்றங்களுக்குப் பின்னர் மேற்குல நாடுகள் ஒருதார மணக் கொள்கையினை வலியுறுத்தி நிற்கின்றன. இதனை இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன் வாழ்ந்த திருவள்ளுவர் மிக வலுவாக நம்பியுள்ளார் (Somasun-

daram 1986: 83) என்பதனை அவருடைய குறள்கள் தெளிவாகவே காட்டுக்கின்றன. தனிமனித, சமூக ஆரோக்கியத்திற்கு ஒத்திசைவான ஒருதார பாலியல் வாழ்வு என்பது எவ்வளவு அவசியம் என்பதனை திருக்குறள் வழியாக அறிந்துகொள்ளமுடிகின்றது.

பாலியல் உணர்ச்சி என்பது உயிரினங்கள் அனைத்துக்கும் பொதுவான ஒன்று அதனை பண்பாட்டு வாழ்வியலின் ஒரு பகுதியாக்கி மனித சமூகம் இன்றுவரை வளர்ச்சியடைந்து வந்துள்ளன. இந்தியத் துணைக்கண்டத்தில் மனித வாழ்வுடன் தொடர்புடைய அறம், பொருள் (அரசியல்), இன்பம் ஆகிய முப்பொருளின் சிறப்பினை முறையே தர்மசாஸ்திரம், அர்த்தசாஸ்திரம், காமசூத்திரம் எனும் முப்பெரும் இலக்கியங்கள் வடமொழியில் பதிவுசெய்துள்ள நிலையில் தமிழில் இந்த முப்பொருட்களையும் திருக்குறள் மூன்று பாலினங்களுக்குள் உரைத்துள்ளது.

மக்களின் சமூகபண்பாட்டு வாழ்வியலின் அங்கமாகிய பாலியல் வாழ்வின் சிறப்புக்களை வேறுபட்ட நோக்குளில் திருக்குறள் வெளிப்படுத்தியிருப்பதினை மேற்குறித்த பகுப்பாய்வில் கண்டுள்ளோம். மானிடவியல் அறிஞரான மலினோவஸ்கி (1927) ட்ரோபியாண் தீவில் மேற்கொண்ட களாய்வின் பயனாக ட்ரோபியாண் மக்களிடையே நிலவும் பாலியல் வாழ்வியல் நடைமுறைகளை இனவரைவியல் நோக்கில் விவரித்துள்ளார். பாலியல் வாழ்வு பற்றிய இவருடைய விவரணம் மிக விரிவாக அமைந்துள்ள, அதேவேளை அவை தொடர்பான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னர் திருவள்ளுவர் திருக்குறளில் தமிழர் மத்தியில் நிலவிய பாலியல் வாழ்வினை மிகவும் நயம்பட உரைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தொகுத்துநோக்கும் போது பண்டைத் தமிழர் வாழ்வியலில் பால்நிலை பாலியல் வாழ்வு பற்றி அறிந்துகொள்வதற்கு திருக்குறள் மிகச்சிறந்த தகவல்களைத் தந்துள்ளமையினை மேற்குறித்த பகுதிகளில் விரிவாகக் கண்டோம். இன்று பால்நிலை பாலியல் பற்றிய தனித்துமான சமூக விஞ்ஞானத் துறைகள் வளர்ச்சியடைந்தாலும் பண்டைய மக்களிடையே நிலவிய

பால்நிலை பாலியல் வாழ்வு பற்றி அறிந்துகொள்வதற்கு திருக்குறள் ஒரு மிகச்சிறந்த ஆதாரமாக இருக்கின்றது. திருக்குறள் தனியே அறநூலாக மட்டுமன்றி தமிழர் வாழ்வியல் பற்றிய "இனவரைவியல் பனுவல்" ஆகவும் விளங்குகின்றது. அதாவது தமிழர் பண்பாட்டிற்கான மூலநூலாக (நீலப் புத்தகமாக) காணப்படுகின்றது.

**உசாத்துணை**


- திருக்குறள் பரிமேலழகர் உரை. *1996.* சென்னை: கங்கை புத்தகநிலையம்
- Benedict, Ruth. 1934. Patterns of Culture' Boston: Houghton Mifflin.
- Malinowski, B. 1927. Sex and Repression in Savage Society. New York: Harcourt Brace.
- Mead, Margaret. 1935. Sex and Tempreramemt in Three Primitive Societies. London: Routledge.
- Morgan, Lewis, H. 1971. Systems of Consanguinity and Affinity of the Human Family. Washington: Smithsonian Institution.
- Somasundram, O. 1986. Sexuality in Thirukkural. Indian Journal of Psychiatry, 28 (1): 83-85.



**கலாநிதி சண்முகராஜா சிறிகாந்தன்**
சிரேஷ்ட விரிவுரையாளர் மானிடவியல்
சமூகவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
srikanthan80@gmail.com